Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 24 (08-01-1992) புதன்கிழமை ஓசை: 324

## ஆண்டுஐந்துபரீட்சை வடபகுதியில் இல்லை

ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான தொழில் நுட்ப சான்றிதழுக்கான போட்டிப் பரீட்சை வடபகுதியில் நடைபெறும் சாத்தியம் இல்லை எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை முழுவதும் கடந்த மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட மேற்படி பரீட்சை பின்னர் தென்பகுதியில் மட்டும் நடைபெற்றது தெரிந்ததே. அரசின் குறுகிய கால அறிவித்தலினாலும் போக்குவரத்து சீரின்மையாலும் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கடந்த மாதம் 18 ஆம் (3ஆம்பக்கம்பார்க்க)

# ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் உயிர்ப்பிக்க டிக்ஸிட் முயற்சி

தமிழர் தேசிய இனப்பிரச்சினை இலங்கை - இந்திய ஒப்பந்தவரையறைக்குள் தீர்வு காணப்படவேண்டுமென்றும், பதின்மூன்றாவது அரசியல் திருத்த சட்டத்திற்குள் கூடிய அதிகாரப்பரவலாக்கம் செய்து பிரச்சினை தீர்க்கப்படுவதையே இந்தியா விரும்புவதாகவும் புதுடில்லியிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்த வரம்பிற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்திய வெளிவிவகாரச் செயலர் திரு. டிக்ஸிட் சிறிலங்கா தூதுக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் இந்தச்செய்திகள் கூறுகின்றன.

இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களை இணைப்பது என்ற அந்த நாட்டின் அரசியலமைப்புச்சட்ட திருத்த அடிப்படையில்இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ஜே. என். டிக்ஸிட் தெரிவித்தார்.

இந்தியாவின் வெளியுறவுச் செயலரான டிக்ஸிட்டும்இலங்கையின் வெளியுறவுச் செயல (3ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் வாசி லண்டனில் மரணம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் நடைபெற்ற ஹொக்கிவிளையாட்டுப்போட்டியின் போது ஏற்பட்ட கைகலப்பில் கொக்குவில் கருவேலடி வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமடைந்தி (3 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் வேணு; மேலும் மூவர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

தவறுதலாகஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் மன்னார் மாவட்டத் தளபதி வேணு வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருடன் மேலும் மூவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை 2·00மணி10நிமிடமளவில் மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு கண்ணிவெடித் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கையில் இடம் பெற்ற தவறுதலான விபத்தில் இவர்கள் வீரச்சாவடைந்தனர்.

அடம்பன் ஆண்டான் குளத்தைச் சேர்ந்த மன்னார் மாவட்டத் தளபதியான



லெப். கேணல் வேணு என்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங். விவகாரங்கள் டில்லியில் மந்திராலோசனை

(புதுடில்லி)

இந்திய இலங்கை உறவு சம்பந்தப்பட்ட பல முக்கிய விவகாரங்கள்பற்றி புதுடில்லியில் உயர்மட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட்ஹேரத் தலைமையில் கடந்தவார இறுதியில் டில்லி சென்ற உயர்மட்ட தூதுக்குழு இந்தியப்பிரதமர், (4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் படை குவிப்பு பேச்சுக்குமுன்போர்மூழுமா?

(கொழும்பு)

வடக்கிற்கு மேலதிகப் படையணிகள் அனுப்பப்பட்டுவருவதாகவும், புதிய இராணுவத் தளபாடங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கில் புதிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கு ஆயத்தங்கள்நடைபெறுவதாகவும் இச்செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பெரும் படையெடுப்புக்களைநடாத்தி விடுதலைப் புலிகளுக்குப் பேரழிவு ஏற்படுத்துவதே இராணுவ தலைமைப்பீடத்தின் இப்போதைய நோக்கமென இச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

# புலிகளின் வெளிநாட்டு உறவு; டில்லியில் ஆராய்வு

உலகில் புலிகள் குறித்தும் பேச்சு

ளின் செயற்பாடுகள் குறித்தும் இலங்கை வெளியுறவு அமைச்

கலந்துரையாடினர். குறிப்பாக இந்தியா, இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகள் உட்பட தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் புலிகள் கொண்டுள்ள உறவு நிலை நடவடிக்கை குறித்தும்

## யுத்தம் முடியும்வரை பேச்சுக்களை நிறுத்துக களனி பல்கலை வேந்தர்

(கொழும்பு)

முதலில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் முடிவடையும் வரை பேச்சுவார்த்தையை மாத்திரமன்றி அர்த்தமற்ற விழாக்களையும் நிறுத்தவேண்டும் என்று களனி பல்கலைக்கழக உப வேந்தர் வண. வல்பொல ராகுலதேரர் தெரிவித்துள்ளார்.

இவர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார் மேலும் அந்த அறிக்கை வருமாறு:

இப்போது நாட்டில் பயங்கர யுத்தம் ஒன்று நடைபெற்

## சமஷ்டி முறை தீர்வாகாது; இராணுவத் தீர்வே வழி

- சு. கட்சி எம். பி. குணசேகரா

யறைக்குள் தீர்வு காணப்படவேண்டுமென்றும், பதின்மூன்றாவது அரசியல் திருத்த சட்டத்திற்குள் கூடிய அதிகாரப்பரவலாக்கம் செய்து பிரச்சினை தீர்க்கப்படுவதையே இந்தியா விரும்புவதாகவும் புதுடில்லியிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்த வரம்பிற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்திய வெளிவிவகாரச் செயலர் திரு. டிக்ஸிட் சிறிலங்கா தூதுக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் இந்தச்செய்திகள் கூறுகின்றன.

இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களை இணைப்பது என்ற அந்த நாட்டின் அரசியலமைப்புச்சட்ட திருத்த அடிப்படையில்இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ஜே. என். டிக்ஸிட் தெரிவித்தார்.

இந்தியாவின் வெளியுறவுச் செயலரான டிக்ஸிட்டும்இலங்கையின் வெளியுறவுச் செயல

(3ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங். விவகாரங்கள் டில்லியில் மந்திராலோசனை

(புதுடில்லி)

இந்திய இலங்கை உறவு சம்பந்தப்பட்ட பல முக்கிய விவகாரங்கள்பற்றி புதுடில்லியில் உயர்மட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட்ஹேரத் தலைமையில் கடந்தவார இறுதியில் டில்லி சென்ற உயர்மட்ட தூதுக்குழு இந்தியப்பிரதமர்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வெளிநாட்டு உறவு; டில்லியில் ஆராய்வு

## உலகில் புலிகள் குறித்தும் பேச்சு

இதுதவிர சர்வதேசநாடுகளிற்கிடையில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல் கேரத்தும் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதேவ் சிங்சோலாங்கியும் கலந்துரையாடினர். குறிப்பாக இந்தியா, இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகள் உட்பட தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் புலிகள் கொண்டுள்ள உறவுநிலை நடவடிக்கை குறித்தும் அவர்கள் பேச்சுக்கள் நடத்தினர்.

# இந்திய-சிறிலங்கா உடன்பாடு மேலும்ஒரு துணை கமிஷன்

இந்திய இலங்கை உயர்மட்ட தூதுக்குழுக்கள் டில்லியில் தமக்கிடையே நடத்திக்கொண்ட பேச்சுக்களின் இறுதியில் மேலும்ஒரு துணைக் கமிசனை அமைத்துக் கொள்வது என்றும் உடன்பாடு காணப்பட்டது.

இருநாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட இருக்கும் இந்த மூன்றாவதான கூட்டுக்கமிசன் அறிவியல் தொழில் நுட்பம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வறுமை ஒழிப்பு; நரசிம்மராவ் - ஹேரத் பேச்சு

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்து, சார்க் நாடுகளில் வறுமை ஒழிப்பு பற்றியஜனாதிபதிஆர். பிரேமதாசாவின் திட்டத்தை தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் விவகாரம் இந்தியா பிரஸ்தாபிப்பு

(டில்லி)

இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையில் புதுடில்லியில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின்போது கச்சதீவு மீன்பிடித்தொழில் விவகாரமும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தப் பேச்சு வார்த்தையில் கச்சதீவுகளில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் விஷயத்தில் இலங்கை கடற்படையினர் நடந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

# 20 ஆம் திகதி 5000 பேர் திரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் ஐயாயிரம் பேர் முதல் தொகுதியாகவரும் 20-ம்திகதி இந்தியக் கப்பல்மூலம் திருக்கோணமலைக்கு வரவிருப்பதாகப்புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான விபரங்களை இந்திய அரசாங்கம் தனது வெளிவிவகாரஅமைச்சு மூலம் தங்களுக்கு அறிவித்துள்

(3ஆம் பக்கம் பார்க்க)

# செங்கலடியில் 3 தமிழர் ரயர் போட்டு எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் செங்கலடி பகுதியில் மூன்று தமிழ்ப் பொதுமக்களை சிறிலங்கா இராணுவத்தினர்சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று ரயர் போட்டு எரித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. செங்கலடி பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படிஅக்கிராமத்தில் ஈடுபட்டனர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் இந்தமூவரதுசடலங்களையும் எடுக்க அவர்களது குடும்பத்தவர்கள் சென்றபோது அச் சடலங்களை சிறிலங்கா இராணுவத்தினர் ரயர் போட்டு எரித்தனர்.

## லண்டனில் மரணம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் நடைபெற்ற ஹொக்கிவிளையாட்டுப்போட்டியின் போது ஏற்பட்ட கைகலப்பில் கொக்குவில் கருவேலடி வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமடைந்தி

(3 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடித் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கையில் இடம்பெற்ற தவறுதலான விபத்தில் இவர்கள் வீரச்சாவடைந்தனர்.

அடம்பன் ஆண்டான் குளத்தைச் சேர்ந்த மன்னார் மாவட்டத் தளபதியான



லெப். கேணல் வேணு என்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் படை குவிப்பு பேச்சுக்கு முன் போர் மூளுமா?

(கொழும்பு)

வடக்கிற்கு மேலதிகப் படையணிகள் அனுப்பப்பட்டுவருவதாகவும், புதிய இராணுவத் தளபாடங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கில் புதிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஆயத்தங்கள்நடைபெறுவதாகவும் இச்செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பெரும் படையெடுப்புக்களைநடாத்தி விடுதலைப் புலிகளுக்குப் பேரழிவு ஏற்படுத்துவதே இராணுவ தலைமைப்பீடத்தின் இப்போதைய நோக்கமென இச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

# யுத்தம் முடியும்வரை பேச்சுக்களை நிறுத்துக

## களனி பல்கலை வேந்தர்

(கொழும்பு)

முதலில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் முடிவடையும் வரை பேச்சுவார்த்தையை மாத்திரமன்றி அர்த்தமற்ற விழாக்களையும் நிறுத்தவேண்டும் என்று களனி பல்கலைக்கழக உபவேந்தர் வண. வல்பொல ராகுலதேரர் தெரிவித்துள்ளார்.

இவர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார் மேலும் அந்த அறிக்கை வருமாறு:

இப்போது நாட்டில் பயங்கர யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஆலோசனைகளும் தெரிவிக்கப்படுகின்றன. என்னைக்கூட ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி அழைத்துள்ளார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி முறை தீர்வாகாது; இராணுவத் தீர்வே வழி

## - சு. கட்சி எம். பி. குணசேகரா

(கொழும்பு)

சமஷ்டி அமைப்புமுறை இனப்பிரச்சினைக்கு என்றுமே பரிகாரமாக அமையாது. அப்படியென்றால் இந்தியாவும், யூகோஸ்லாவியாவும் இனங்களுக்கிடையே சமாதானமும் சௌஜன்யமும்நிலவும் சொர்க்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்த நாடுகளில் எல்லாம் மறக்கமுடியாதபடி இனப்பிரச்சினை இருக்கவே செய்கிறது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. திரு. எஸ். எல். குணசேகரா இனப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா பொருளாதார நிலை உதவிவழங்குவோர் கவலை

## மனித உரிமைச் சட்டத்திலும் திருப்தியில்லை

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு உதவிவழங்கும் நாடுகள் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி பாரிஸில் நடத்தவுள்ள கூட்டத்தின்முன்னோடியாக இந்த நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் முக்கிய அதிகாரிகளை நேற்றுக் கொழும்பில்சந்தித்துப்பேசினர்.

1990 அக்டோபரில் நடத்தப்பட்ட மாநாட்டின் பின் இந்தநாடுகள் 1000 மில்லியன் டாலர் நிதி உதவி சிறிலங்கா

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# பல்கலை. மாணவன் மர்ம முறையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட நான்காம் வருட மாணவன் சதீஸ்குமார் மர்மமான முறையில் மரணமடைந்தார். யாழ். பெருமாள் கோயிலடியில் காணப்படும் இவரது வீட்டிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சக மாணவர்களது கூற்றுப்படி நேற்று நண்பகல் வரை

(4ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவின் திட்டத்தால் பீதியுறுவது அர்த்தமற்றது

- றெஜி சிறிவர்த்தனா

(கொழும்ப)

இனப்பிரச்சினைத்தீர்விற்கு அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகள் தமிழீழத்தை வழங்குவதற்கு ஒப்பானதென்று கூறுவது அர்த்தமற்றது என பத்திரிகையாளர் றெஜி சிறிவர்த்தனா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சகல மக்கள் பிரிவினருக்கிடையிலும், சகல கட்சிகளுக்கு இடையிலும் கலந்துரையாடல்களையும் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவதற்கான அடித்தளமாக இந்த யோசனைகள் அமைய வேண்டும்.

இந்த யோசனைகளின் விபரங்களை மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அதிலிருக்கலாம். இந்த யோசனைகள் தமிழீழத்தை வழங்குவதற்கு ஒப்பானதென்று பீதியுற்ற சிலர் கூறுவது அர்த்தமற்றதாகும்.


உண்மையில் சுவிற்சலாந்து, கனடா அல்லது அமெரிக்கப்பாணியிலான பூரணத்துவம் பெற்ற உடன்பாட்டிற்குக் கூட இது ஒப்பானதல்ல வென்றும் றெஜி சிறிவர்த்தனா தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, காத்திரமான அரசியல் தீர்வொன்றின் மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்படும் சகல முயற்சிகளும் ஆதரிக்கப்பட வேண்டுமென்று நான் திட்டவட்டமாகக் கூறுவேன் என்றும்-

இனவெறியையும், மனோவிகாரத்தையும் உசுப்பி விடுவதற்கு இந்த யோசனைகளை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த சில அரசியல் வாதிகளும் சித்தாந்தவாதிகளும் முனைந்துள்ளார்கள் என்பதை நான் வெகுவாகக் கண்டிக்கிறேன் என்றும்-

கடந்த தசாப்த காலத்தில் எமது நாட்டின் துயரமான அனுபவங்களிலிருந்து அவர்கள் எதனையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, ஒரு காலத்தில் மேலாதிக்க வல்லரசாகத் திகழ்ந்த முன்னாள் சோவியத் யூனியன் சரியான தருணத்தில் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியதால் சிதறிப் போனதென்ற உண்மையை அவர்கள் உணரத் தவறிவிட்டனரென்றும் றெஜி சிறிவர்த்தனா தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

## 6-ஆம் மாத நினைவஞ்சலி



வீரஜனனம் 1969

வீரச்சாவு 14-07-1991

**வீரவேங்கை மொசாட்**
**(ஆறுமுகம் ஜெயமோகன்)**

எங்கள் மைந்தனே! மொசாட்!!
வாழ்வில் இனிய வசந்த காலத்தில்
உன் இருப்பை நாம் இழந்தோம்.
ஆனையிறவு படைத்தள தாக்குதலில்
நீ - சாவை வென்று வாழ்கின்றாய்.
தேசத்தின் விடிவிற்காக களத்தில் நிற்கும்
போராளிகளின் வடிவில் நீ வாழ்வாய்
''மரணம் வாழ்வின் முடிவல்ல''

ஆறுமுகம் ஆசிரியர்,
4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு. (சி/2077)

அன்புடன்,
அம்மா, அப்பா,
அண்ணா, தங்கச்சிமார்,
தம்பி.

## வரி விளம்பரம்

**கம்பியூட்டர் கல்வி**

Computer Programming in Basic language வார இறுதி வகுப்புகள் 12-01-92 10.30 மணிக்கு கம்பியூட்டர் பட்டதாரி ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. School of Business Administration 16, 3 வது குறுக்கு வீதி. யாழ்ப்பாணம். (சி 3741)

**வேலை வாய்ப்பு**

தொழிலாளர், விற்பனை உதவியாளர் தேவை. 1992. 01. 14ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேலதிக விபரங்கட்கு: யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/3749)

**தேவை**

நாம் குறிப்போட்டு அனுப்பி வைக்கும் ஆங்கில பத்திரிகை அரசியல் கட்டுரைகளை தமிழாக்கம் செய்து அனுப்ப ஆள் தேவை. 12 அங்குல கொலத்துக்கு ஊதியம் எவ்வளவு என்பதையும் குறிப்பிட்டு எழுதவும் செ. அழகரத்தினம், கெருடாவில் தொண்டமானாறு. (2079)

## அமெரிக்காவில் வெடி விபத்தில் விஞ்ஞானி பலி

அமெரிக்க அணுசக்தி நிலையமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் விஞ்ஞானி உட்பட நான்கு பேர் உயிர் இழந்துள்ளனர்.

அணு இணைப்பு சம்பந்தமான ஆராய்ச்சியொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்த வெடி நிகழ்ந்தது.

## உடன் தேவை

சகல விதமான நகை வேலையில் கைதேர்ந்த நகைத் தொழிலாளர்கள் உடன் தேவை.

தொடர்பு:-

**அழகு நிலா நகைமாடம்**

213 - D கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3751)

## நினைவு கூருகின்றோம்

**1992 - 01 - 08**

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை முகாமிலிருந்து வெளியே வந்த சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**பாபு** [இராசநாயகம் பாலகிருஷ்ணராஜா - அரசு தோட்டம், கரவெட்டி மத்தி]

**வின்சன்** [சுப்பிரமணியம் வைகுந்தவாசன் - தும்பளை, பருத்தித்துறை]

1988 ஆம் ஆண்டு பெரியவிளானில் இந்தியப் படை கைது செய்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ரமேஸ்** [இராசையா சுதாகரன் - சிறுவிளான், இளவாலை]

1989 ஆம் ஆண்டு இராமநாதபுரம் பழைய கண்டி வீதியில் இந்தியப் படையினர் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த 2 தமிழ் வயோதிபர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3744)

## யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் - வரைவுள்ளது

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தினால் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அகநிலைக் கணக்காய்வாளர் - 105.8
2. கிளை முகாமையாளர் - 208.11
3. விற்பனையாளர் - 308.15

சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்கட்கும், கூட்டுறவு சங்கப் பணியாளர்கட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 16 - 01 - 1992**


மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
08 - 01 - 1992

பொது முகாமையாளர்

[சி 3750]

குறைந்த விலை நிறைந்த தரம் சிறந்த சேவை
மாணவர்களின் நலன்கருதி அவர்களுக்கென விசேடமாக வரவழைக்கப்பட்ட பாடசாலை



வீரஜனனம்

1969

வீரச்சாவு

14-07-1991

## வீரவேங்கை மொசாட்
## (ஆறுமுகம் ஜெயமோகன்)

எங்கள் மைந்தனே! மொசாட்!!
வாழ்வில் இனிய வசந்த காலத்தில்
உன் இருப்பை நாம் இழந்தோம்.
ஆனையிறவு படைத்தள தாக்குதலில்
நீ - சாவை வென்று வாழ்கின்றாய்.
தேசத்தின் விடிவிற்காக களத்தில் நிற்கும்
போராளிகளின் வடிவில் நீ வாழ்வாய்
''மரணம் வாழ்வின் முடிவல்ல''

ஆறுமுகம் ஆசிரியர்,
4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

அன்புடன்,
அம்மா, அப்பா,
அண்ணா, தங்கச்சிமார்,
தம்பி.

(சி/2077)

கடந்த தசாப்த காலத்தில் எமது நாட்டின் துயரமான அனுபவங்களிலிருந்து அவர்கள் எதனையும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, ஒரு காலத்தில் மேலாதிக்க வல்லரசாகத் திகழ்ந்த முன்னாள் சோவியத் யூனியன் சரியான தருணத்தில் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியதால் சிதறிப் போனதென்ற உண்மையை அவர்கள் உணரத் தவறிவிட்டனரென்றும் றெஜி சிறிவர்த்தனா தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

(2079)

## அமெரிக்காவில் வெடி விபத்தில் விஞ்ஞானி பலி

அமெரிக்க அணுசக்தி நிலையமொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தினால் விஞ்ஞானி உட்பட நான்கு பேர் உயிர் இழந்துள்ளனர்.

அணு இணைப்பு சம்பந்தமான ஆராய்ச்சியொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்த வெடி நிகழ்ந்தது.

(சி-3744)

விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

## உடன் தேவை

சகல விதமான நகை வேலையில் கைதேர்ந்த நகைத் தொழிலாளர்கள் உடன் தேவை.

தொடர்பு:-

**அழகு நிலா நகைமாடம்**

213 - D கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3751)

## யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது
## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தினால் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அகநிலைக் கணக்காய்வாளர் - 105.8
2. கிளை முகாமையாளர் - 208.11
3. விற்பனையாளர் - 308.15

சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்கட்கும், கூட்டுறவு சங்கப் பணியாளர்கட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 16 - 01 - 1992**

மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
08 - 01 - 1992

பொது முகாமையாளர்

[சி 3750]


**குறைந்த விலை** **நிறைந்த தரம்** **சிறந்த சேவை**

மாணவர்களின் நலன்கருதி அவர்களுக்கென விசேடமாக வரவழைக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் யாவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

- புடைவை வகைகள்
- அழகுசாதனப் பொருள்கள்
- கண்ணாடிப் பாத்திரங்கள்
- பிளாஸ்ரிக் வகைகள்
- சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
- எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெறுவதற்கு

**விஜயம் செய்யுங்கள்**

# ஏரிலகம்

**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு:
1) பாடசாலை அதிபரின் ஊடாக மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அப்பியாசப் புத்தகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
2) மத்திய கிழக்கு தவிர்ந்த ஏனைய மேலை நாட்டு நாணயங்கள் நியாயமான விலையில் மாற்றிக் கொடுக்கப்படும்.

(சி/3747)

## சிந்தனைக்கு

ஆத்திரமும் துவேஷமுமே ஆள்கின்றன
உலகை - நியாயம் என்பதன் பெயரால்!
— ஜான்வெஸ்லி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 08-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# சுத. கட்சி எம். பியின் புதிய கண்டுபிடிப்பு

சமஷ்டி அமைப்பு முறை இனப்பிரச்சினைக்கு என்றுமே பரிகாரமாக அமையாது. அப்படியென்றால் யூக்கோ செலவோக்கியாவும் இந்தியாவும் இனங்களுக்கிடையே சமாதானமும் சௌஜன்யமும் நிலவும் சொர்க்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இந்த நாடுகளில் எல்லாம் மறுக்க முடியாத படி இனப்பிரச்சினை இருக்கவே செய்கின்றது. ஆகவே, இனப்பிரச்சினைத் தீர்விற்கு புலிகள் முற்று முழுதாக அழித்தொழிக்கப்பட வேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. எஸ். எல். குணசேகரா பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குத் தெரிவித்துள்ள யோசனைகளில் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் எம் பி. குணசேகரா குறிப்பிட்டதுபோல் இந்தியா, யூக்கோ செலவோக்கியா போன்ற சமஷ்டி அமைப்புக்களினால் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லைத்தான். இதனால் அங்கு இரத்த வெள்ளம் ஓடுவதும் உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் இந்தியாவிலும் யூக்கோ செலவோக்கியாவிலும் உள்ள அரைகுறை சமஷ்டி அமைப்புக்களே. இந்தியாவை எவரும் எப்பொழுதும் ஒரு சமஷ்டி அமைப்பு என ஏற்றுக் கொள்வதும் இல்லை. உதாரணமாகக் காட்டுவதும் இல்லை. யூக்கோ செல வோக்கியா கம்யூனிஸ்ட் கட்சியின் பிடியில் இருந்ததே ஒழிய அங்கும் சமஷ்டி அமைப்பிற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவில்லை.

திரு. குணசேகரா குறிப்பிட்டதைப்போல் பலவீனமான சமஷ்டி அமைப்புக்களைவிட இன்று உலகில் சமஷ்டி அமைப்பிற்கு உதாரணமாகக் காட்டப்படும் சுவிட்ஸசலாந்து, கனடா போன்ற நாடுகளில்கூட இனங்களுக்கு இடையிலான சில சச்சரவுகள் தோன்றியுள்ளன. ஆகையினால் சமஷ்டி அமைப்பு முறையால் தேசிய இனங்களின் பிரச்சினைகள் தீர்க்க முடியாது என்றகேள்வி எழுந்துள்ளது. ஆனால், உலகம் அதற்கு இராணுவத் தீர்வை நாடவில்லை. உலகம் சமஷ்டி அமைப்பு முறைக்கு அப்பால் கூட்டாட்சி முறைகளைப் பற்றியும் சிந்திக்கின்றது. அதன் ஒரு வடிவமாக இன்று புதிய பொதுநலவாய அமைப்பொன்றை உருவாக்குவதில் முன்னைய சோவியத் குடியரசுகள் - விடுதலை அடைந்தபின் - சுதந்திரமான நிலையில் சிந்தித்து வருகின்றன.

ஆனால் இத்தேசிய இனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இராணுவ நடவடிக்கை எடுக்க ரஷ்யாவிடம் இராணுவம் இல்லாமல் இல்லை தேவையான ஆயுதங்களும் இல்லாமலும் இல்லை. ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றால் தேசிய இனங்களின் சுதந்திரத்தை அங்கீகரித்தே ஆக வேண்டும் என்ற நிலையிலேயே அவை அங்கீகரிக்கப்பட்டன.

தேசிய இனப்போராட்டங்களை இராணுவ ரீதியில் அடக்கி விடலாம் எனின் பாலஸ்தீனப் போராட்டமும்குர்திஷ் போராட்டமும் இராணுவ ரீதியாக அடக்கப்பட்டிருக்கும். இஸ்ரேல் பாவிக்காத கொடூரமான அடக்கு முறைகளோ அன்றி ஈராக் பாவித்த இரசாயன ஆயுதங்களோ தேசிய இனங்களின் போராட்டங்களை வெற்றி கொண்டுவிட முடியவில்லை.

இந் நிலையில் திரு. குணசேகராவின் யோசனை உலகம் தந்த பாடத்தினையோ அன்றி கடந்த தசாப்தத்தில் இலங்கையில் நிகழ்ந்தவற்றையோ மனதிற் கொள்ளாததாகும். இனவாதம் ஒன்றையே நோக்காகக் கொண்டதாகும். இவர்களினால் சிங்கள மக்கள் எதுவித நன்மையும் அடைந்துவிடப் போவதில்லை.

---

இராணுவத் துறை குறித்து

# ரஷ்யா, உக்ரைன் இடையில் பகிரங்க கருத்து வேறுபாடு

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் இராணுவ விஷயங்களில் பகிரங்கமாக கருத்து வேற்றுமை கிளம்பியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதினொரு குடியரசுகளின் இரண்டாவது பலம் வாய்ந்த நாடான உக்ரைன் கடந்த வெள்ளிக்கிழமை தனது சொந்தப்படையை அமைக்க ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து ரஷ்யாவிற்கும், உக்ரெயினுக்கும் இடையில் பகிரங்கமாக கருத்து வேறுபாடுகள் ஆரம்பமாகின எனத் தெரிவிக்கப்படுகிறது

உக்ரெயின் கருங்கடல் கடற்படை உட்பட தனது நாட்டிலுள்ள சகல சோவியத் ஆயுதப்படைகளையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளது.

ஆனால் சோவியத் படைகளை நிறுவுவதில் ரஷ்யா பிரதான பங்கு கொண்டிருந்தது என்றும், எனவே இப் படைகள் தனது கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்றும் ரஷ்ய பாராளுமன்றத் தலைவர் ருஸ்லான்கஸ்புலடோவ்தெரிவித்திருக்கிறார்

300 கப்பல்களைக் கொண்ட கருங்கடல் கடற்படைக்கு உக்ரைன் உரிமை கொண்டாடுவதை ரஷ்யா நிராகரித்துள்ளது. இதன் ஒரு பகுதியாவது தனது வசம் இருக்க வேண்டும் எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேபோல கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் முன்னாள் குடியரசுகள் சோவியத் ஆயுதப் படைகளை ஒன்றாகவைத்திருக்க இணக்கம் தெரிவிக்கவில்லை.

குறிப்பாக உக்ரைன், மொல்டோவா. அஸர்பைசான் ஆகிய நாடுகள் தங்கள் சொந்தப் படையை நிறுவவிரும்புகின்றன. உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், பெலாரஸ் ஆகிய மூன்று நாடுகளும் தங்கள் சொந்தப்படைகளை அமைப்பது பற்றி ஆலோசித்து வருகின்றன.

இத்தகையதொரு நிலை பதினொரு பொதுநல அமைப்பு நாடுகள் மத்தியில் காணப்படுவதாகவும், சொந்த இராணுவப்படை அமைப்பது குறித்து இந்த நாடுகள் இணக்கம் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

கம்போடியா மீதான

# பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கியது

(சிங்கப்பூர்)

கம்போடியாவுக்கு எதிராக பதினேழு வருடங்களுக்கு முன்னர் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்குவதென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் யுத்தத்தின் போது 1975 இல் கம்போடியாவிற்கு எதிராக விதிக்கப்பட்ட இத் தடையால் பாதிக்கப்பட்ட கம்போடியாவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் கவனஞ் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

---

# 34 கியூபா பிரஜைகள் அமெ. அடைக்கலம்

(மியாமி)

கியூபா பிரஜைகள் முப்பத்து நான்கு பேர் அமெரிக்காவில் உள்ள மியாமி என்ற இடத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

இவர்களை ஏற்றிவந்த ரஷ்ய ஹெலிகொப்ரர் அரசியல் தஞ்சம் கோரி மியாமி விமான நிலையத்தில் தரையிறங்கியது அண்மைக்காலத்தில் இந்தளவிற்கு அதிருப்தியாளர்கள் அமெரிக்காவுக்கு வந்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இந்த ஹெலிகொப்ரர் ஜெட் விமானத்தினால் வழிமறிக்கப்பட்டபோது இவர்கள் அனைவரும் அரசியல் தஞ்சம் கோரி வந்திருப்பது தெரியவந்தது.

தற்போது இவர்கள் அனைவரும் அமெரிக்க குடிவரவு சுங்கப்பகுதியினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்

கியூபாவில் வர்த்தக மயப்படுத்தப்பட்ட ஹெலிஹொப்ரர் சக்திமிக்கசோவியத்ளனர் ராடர்களுக்குத் தெரியாமல் எவ்வாறு வெளியேறியது என்பது மர்மமாகவேயுள்ளது.

---

## பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொம்படி வீதியில் நித்திரை செய்துகொண்டிருந்த பெண் ஒருவர் மீது லொறி ஏறியதில் அப் பெண் பலத்த காயமடைந்திருக்கிறார்.

நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தில் கோகிலாபதி (வயது 39) என்பவர் படுகாயமடைந்திருக்கிறார். (க)

---

### மீனவர்

கொள்ளும் முறை குறித்து ஹேரத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும்,

எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்கள் மீது மனிதாபிமானத்துடன் இலங்கை கடற்படை செயற்படும்என்று அவர் வாக்குறுதி அளித்ததாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இந்திய

மேற்கொள்ளும் என்றும் இவ் வருட இறுதிக்குள் இலங்கையில் இந்தியாவின் கலாசார நிகழ்ச்சிகளும், பொருட்காட்சியும்நடத்துவதுஎனவும்உடன் பாடு காணப்பட்டது.

### ஆண்டு ஒன்பது

திகதியே பரீட்சை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் மேற்படி பரீட்சைத் திட்டம் கைவிடப்படலாம் எனவும் அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் நடைபெறவுள்ள க பொ. த. உயர்தரப் பரீட்சையுடன் சேர்த்து மேற்படி பரீட்சையை நடத்துவதற்கான முயற்சியில் யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் ஈடுபட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது. (ச)

### சிறிலங்கா

வுக்கு வழங்கின.

இனிமேல் வழங்கப்படும் உதவி மனித உரிமைகளுடன் தொடர்பு படுத்தப்படும் என்றும் இந்த நாடுகளின் பிரதிநிதிகள் சிறிலங்காவைஎச்சரித்துள்ளனர்.

சிறிலங்கா அதிகாரிகள் அண்மையில் மனித உரிமைகள் ஸ்தாபனம் முன்வைத்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருப்பதைக்காட்டி, கடந்த ஒரு வருட காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை வலியுறுத்திப் பேசின.

சிறிலங்கா அறிமுகப்படுத்தியுள்ள பாதுகாப்பு களுக்கு மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் போதிய அதிகாரம் இல்லை என்று மேற்படி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

சிறிலங்காவின் பொருளாதார நிலை பற்றியும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட சிறிலங்கா மூத்த அதிகாரிகள் குழுவிற்குத் தலைமை வகித்தார்.

### ராஜீவ் - ஜே. ஆர்

ரான பேர்னாட் திலகரட்ணாவும் நேற்று புதுடில்லியில் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்த பேச்சு வார்த்தையிலேயே திரு. டிக்சிற் பேனாட் திலகரட்ணாவிடம் இவ்வாறு கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து டிக்சிற் மேலும் கூறுகையில்; வன்முறையை கைவிட்டு ஜனநாயகத்துக்குதிரும்பும் ஆயுதக் குழுக்களுடன் சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தை நடாத்தவேண்டும் இதன்மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### வறுமை

வித்தநோடு, இந்தியாவின் ஆதரவையும் கோரினார். சார்க் உச்சி மாநாட்டில் எடுத்துக் கொண்ட முடிவிற்கு இணங்க வறுமை ஒழிப்பு ஆணைக்குழுவொன்றை சிறிலங்கா அமைக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை திரும்ப இருக்கும் தமிழ் அகதிகளை ஏற்க திருக்கோணமலையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது சுமுகமான முறையில் அமுல் படுத்தப்படும் என்றும் ஹரல்ட் ஹேரத் உறுதியளித்தார்.

### கொக்குவில்

ருக்கிறார்.

கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தின் போது ப. சுகிதரன் (வயது28) என்பவர் மரணமடைந்திருக்கிறார். இவர் இவ்விளையாட்டுப் போட்டியில் பார்வையாளராக இருந்தபோதே இச்சம்பவம் நிகழ்ந்தது.

### 20 ஆம் திகதி

ளதாகவும்அவர்தெரிவித்தார்.

20 ஆம் திகதி அவர்களை ஏற்றிவரும் கப்பல் அன்றிரவே திருக்கோணமலைத் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### லெப். கேணல்

அழைக்கப்படும் பிரான்சிஸ் ரபேட் சேவியர் புதுக்குடியிருப்பு, மணற்குளத்தைச்சேர்ந்த மேஜர் குகன் என அழைக்கப்படும் ராகவர்த்தன் சிவஞானம், உப்புக்குளம் மன்னாரைச் சேர்ந்த மேஜர் சயந்தன் என அழைக்கப்படும் தங்கராஜா ராஜ்மோகன், கடத்தெருவீதி சோலையைச் சேர்ந்த கப்ரன் குட்டிமணி என அழைக்கப்படும் அருளானந்தம் ரேமன் ஆகியோரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# பஞ்சத்திலும், பட்டினியிலும் கிழக்கில் தமிழர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசினால் ஒர வஞ்சனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். இங்கு சிங்கள மக்களுக்கு செய்துகொடுக்கும் வசதிகளில் ஒரு சிறு பகுதி கூட தமிழ் மக்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை என்று செய்திகள் கூறுகின்றன

புதுக்குடியிருப்பு - மேற்கு கொலணி, பட்டிமேடு, நாயன் மார்திடல், குஞ்சம்பத்திடல் ஆகிய கிராமத்து மக்கள் பரிதாபமானநிலையில் பஞ்சத்திலும், பட்டினியிலும் வாடி வருவதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

இந்த கிராமங்களை சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்துதல் என்ற பெயரில் தம்பலகாமம் அகதிமுகாமிலிருந்துசிறிலங்கா படையினரால் அழைத்து வரப்பட்டு குடியமர்த்தபட்டனர். ஆனால் தங்குமிடவசதியோ எதுவும் இல்லாத நிலையிலும் தற்காலிகமாகவாவது தமது வீடுகளை அமைத்து கொள்வதற்கு எந்தவித நிதி உதவி செய்யப்படாதநிலையிலும் இருந்து வருகின்றனர். இவர்கள் ஒருவேளை உணவுக்கே பெரும் கஷ்டப்படுகின்றனர்.

இதேவேளை கல்லிராவை எனும் இடத்தில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு மீன்பிடி தொழிலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டு, தங்குமிட வசதியும் உலர் உணவு வகைகளும் வழங்கப்பட்டுவருகின்றது என்றும் அச்செய்திகள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

## அன்னை பூபதி

# பொது அறிவுத் தேர்வு ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத்தேர்வுதொடர்பாக தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கருத்தரங் கொன்றை நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தமிழ், சமூகக் கல்வி, விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இக் கருத்தரங்கில் ஒரு பாடசாலையிலிருந்து மேற்படி பகுதிகளில் ஒரு ஆசிரியர் வீதம் குறைந்தது மூவரை அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் 9-1-92 அன்று காலை 9.00 மணிக்கு பளை கொத்தணி கிளி/பளை ம. வித்தியாலயத்திலும், பி.ப. 1.00 மணிக்கு வரணி, கொடிகாமம், உசன், கொத்தணிகளுக்கு யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும், 10.1.92 அன்று காலை 9.00மணிக்குசாவகச்சேரி நகர் சாவகச்சேரி வடநகர் மட்டுவில் கொத்தணிகளுக்கு யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பி.ப. 1.00 மணிக்கு கைதடி கொத்தணிக்கு யா/ கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும் இடம் பெறும்.

# பதுளையில் தமிழர் அச்சம்; திட்டமிட்ட புரளியா?

(பதுளை)

பதுளை பகுதி தோட்டங்களைச் சேர்ந்த தமிழ் தொழிலாளர்கள் பலர் தங்களது பிள்ளைகள் கைது செய்யப்படலாமென அச்சம் தெரிவித்து அங்குள்ள தொழிற்சங்க அலுவலகங்களுக்கு படையெடுப்பதாக தெரியவருகிறது.

பதுளை நமுனுகல மலையில் புலிகளின் கைவிடப்பட்ட முகாம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்ட செய்தியைத் தொடர்ந்தே அங்குள்ள பெற்றோர் மத்தியில் இந்த அச்சம் நிலவுவதாக தொழிற்சங்க வட்டாரங்கள் கூறுகின்றன

இது இவ்விதமிருக்க நமுனுகலபகுதியில் சமீபத்திய தினங்களில் குறிப்பிடத்தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள்எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பௌத்த பிக்குமாரினால் அமைக்கப்பட்ட குடிசைகளே அங்குள்ளன என்றும்அப் பகுதி தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களிடம் எடுத்துக் கூறியுள்ளன.

# தமிழகத்தில் வன்முறை; ராமதாஸ் விடுதலை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸும், அந்தக்கட்சி எம். எல். ஏ யான பண்டிருட்டி ராமச்சந்திரனும் நேற்று மாலை சேலத்தில் விடுவிக்கப் பட்டனர்.

கர்நாடகத்தில் சமீபத்தில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளினால் இடம் பெயர்ந்து வந்துள்ள தமிழர்களை அங்கு மீளக் குடியேற்ற அழைத்துச் செல்ல முயற்சி செய்தபோது கடந்த ஞாயிறன்று ராமதாஸ் கைது செய்யப்பட்டார். அவரோடு கூடக் கைது செய்யப்பட்ட 300 கட்சித் தொண்டர்களும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை, ராமதாஸை யும், அவரோடு கைதாகியவர்களையும் விடுதலைசெய்யுமாறு கோரி நேற்றும் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

# உள்நுழைவோர் அனுமதி புதிய அலுவலகம்

எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து வடபகுதிக்கு உள்நுழைவோர் அனுமதி அட்டைகளை புதுப்பிப்பதற்கு என தனியான ஒரு புதிய அலுவலகம் முத்திரைச் சந்தியில் இயங்க உள்ளது. எனவே பயணிகள் தமக்குரிய உள்நுழைவோர் அனுமதி அட்டைகளை இந்த புதிய அலுவலகத்தில் கொடுத்துஉடனுக்குடன்புதுப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் எமதுபிரதேச அவசர அனுமதி அலுவலகங்கள் ஊடாக தமது நுழைவோர் அனுமதி அட்டைகளை புதுப்பித்துக் கொள்ள விரும்பும் பயணிகள் தமது நுழைவோர் அனுமதி அட்டைகளை குறிப்பிட்ட தமது பிரதேச அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்தில் கையளித்து, கையளித்த தினத்தில் இருந்து ஏழு தினங்களின் பின் முன்பு கையளித்த அதே பிரதேச அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்திலே புதுப்பித்து பெற்கொள்ள முடியும் என்பதனை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பயணிகளுக்கு அறியத் தந்துள்ளது.

அத்துடன் முன்பு கோண்டாவிலில் இயங்கி வந்த ஊழியர்களிற்கான அனுமதி வழங்கும் அலுவலகமும் எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து முத்திரைச்சந்தியிலேயே இயங்கும் என்பதினையும் அரசதனியார் ஊழியர்களின் கவனத்திற்குத் தெரிவித்துள்ளது.

ச

# மரண அறிவித்தல்

## பஞ்சாட்சரம் சகிதரன் (லண்டன்)

பஞ்சாட்சரம் சகிதரன் லண்டனில் அகாலமரணமானார். இவர் தம்பாப்பிள்ளை பஞ்சாட்சரம் (ஓய்வு பெற்ற லிகிதர் யாழ். கச்சேரி) தனலக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயலக்சுமி, கெங்கா (ஜேர்மனி), கணேசன் (ஜேர்மனி), கௌரி, யசோ (லண்டன்), மோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பஞ்சலிங்கம் (நீர்பாசன இலாகா வவுனியா), ராஜரெட்ணம் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (சிங்கம் எலெக்ரிக்கல்ஸ் கோண்டாவில்), ஜெயபாலதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம். தகனக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

கருவேலடி லேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்:
சிவம்

(2081)

## யுத்தம்

இது பேச்சுவார்த்தைகளுக்கான தக்க சமயமல்ல என்பது எனது உண்மையான நம்பிக்கையாகும். முன்னர் இப்படியான பேச்சுவார்த்தைகளினால் இடம்பெற்ற அழிவுகளை நாம் மறந்து விடக்கூடாது. மறுபடியும் நாம் புத்தியில்லாமலும், குறுகிய நோக்குடனும் நடந்து கொள்ளாமல், பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும்—

பேச்சுவார்த்தைகளை மாத்திரம் நாம் நிறுத்தக் கூடாது அத்துடன் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வரை அர்த்தமற்ற கேளிக்கைகளையும் கைவிடவேண்டும் அதற்குப்பின் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தி விழாக்களையும் கொண்டாடலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பப்பெண் மரணம்

முல்லைத்தீவில் நேற்று கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பப்பெண் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் காயமடைந்தும் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அலம்பில் என்ற என்ற இடத்தைச் சேர்ந்த அ. சாந்தகுமாரி (வயது 25) என்பவரே மரணமடைந்திருக்கிறார். இவரது கணவனான அமிர்தலிங்கமும் 45 நாள் வயதுடைய இப்பெண்ணின் குழந்தை அ. சோபனா ஆகிய இருவரும் பலத்த காயமடைந்திருக்கின்றனர்.

திரு. அமிர்தலிங்கம் கட்டுத்துவக்கைத் தயாரித்துக்கொண்டிருந்ததை மனைவி குழந்தைக்கு பாலூட்டியபடி பார்த்துக்கொண்டிருந்தபோது கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததனால் தாய் மரணமானார். குழந்தையும், தந்தையும் காயமடைந்தனர். (க)

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்; திட்டம் இடை நடுவில்

வடக்கில் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கான திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தற்போது பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களைக் கொண்டே சமாளிக்கும் படியும் இவ்வாண்டில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நிதி இல்லாததே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# முறைசாராக் கல்விக்கு ஆய்வுகூடம்

யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவினருக்கு முதல் தடவையாக ஆய்வு கூடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்படி முறைசாராக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாகியும் இதுவரை இவர்களுக்கான ஆய்வு கூட வசதிகள் செய்யபபடாமையினால் மேற்படி கல்வித் திட்டம் பூரண வெற்றியை அளிக்கவில்லை என இதற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூடத்தை ஆரம்பிப்பதன் மூலம் உள்ளூர் தொழில்நுட்பங்களையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் ஊக்குவிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

## சமஷ்டி

பிரச்சினைத் தீவுர்க்கு வழி காணுமுகமாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றதெரிவுக்குழுவுக்குத் தெரிவித்துள்ள யோசனைகளில் கூறியுள்ளார்.

அவர் தமதுகருத்தில் இனப்பிரச்சினைக்கு நீதியான, நீடித்த தீர்வைக் காண்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட வேண்டும் அல்லது இராணுவ சக்தி அழித்தொழிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ் தாயகம் பற்றிய பிரச்சினைபற்றி அவர் குறிப்பிட்டபோது அதற்கு வரலாற்று ரீதியான ஆதாரம் எதுவுமில்லை எனத் தெரிவித்தார். 2500 வருடகால வரலாற்றில் மூன்று நூற்றாண்டுகளுக்கு வடமாகாணத்தில் ஒரு பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் இருந்தமை இந்தத் தமிழ் தாயகக் கோரிக்கையை முன்வைக்க ஒரு நியாயமான அடிப்படையல்ல. அப்படியிருப்பினும் குறுகிய காலமே இருந்த இந்த யாழ்ப்பாண இராச்சியம் எந்தக் காலகட்டத்திலும் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் உள்ளாகவில்லை. தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பதானது சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் ஏற்படுத்த உதவாது என்றார்.

## இந்திய இலங்.

இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய வெளிவிவகாரசெயலாளர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல், தமிழர் இனப்பிரச்சினை, விடுதலைப் புலிகள் விவகாரம், கச்சதீவுபிரச்சினை இந்தியஇலங்கை வர்த்தகஉறவுகள் பற்றியும் விரிவானமுறையில் பேச்சுகள் நடைபெற்றுள்ளன.

## பல்கலை மாணவன்

பல்கலைக்கழகத்தில் இருந்தார். என்றும், அதன் பின் வீடு திரும்பியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. நண்பகலின் பின்னர் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டது. நேற்று மாலையே இவரது சடலம் இவரது வீட்டில் உள்ள அறை ஒன்றில் கட்டிலின்மேல் காணப்பட்டது.

இவரதுகழுத்தில் துணிப்பட்டி கட்டப்பட்டு அகப்பைக்காம்பின் ஒருபகுதியை துணிப்பட்டியில் செருகப்பட்டு சுற்றிகழுத்துப்பகுதி இறுக்கப்பட்டிருந்தது. வாய் மூலமாக இரத்தம்வடிந்தவண்ணம்இருந்தது.

இவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலைசெய்து கொண்டாரா என்பதுபற்றி திட்டவட்டமான தகவல் எதுவுமில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில்1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.